பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
12 07 2025 **SATURDAY 7.15 PM**
ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இளையோர் சக்தியிலும், ஜனநாயக நடைமுறையிலும் இந்தியா வலுவான நாடாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டுவதில் தென்மாநிலங்களின் முன்னேற்றம் அவசியம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

- தமிழகத்தில், கோயில் நிதி அறம் சார்ந்த பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

- சத்தீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில், 23 நக்சலைட்டுகள் காவல்துறையினரிடம் இன்று சரணடைந்தனர்.

- அமெரிக்க சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Prarthana Thombare - நெதர்லாந்தின் Arianne Hartono இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது..

--இனி விரிவான செய்திகள்--

<<<<<<<>>>>>>

உற்பத்தித்துறை விரைவான வளர்ச்சி கண்டுவருவதன்மூலம் ஏராளமான புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் மத்திய அரசு பணிகளுக்கு தேர்வான 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பணி நியமன ஆணைகளை காணொலி வாயிலாக வழங்கி பேசிய அவர், உற்பத்தித்துறையை ஊக்குவிக்கும் வகையில், பட்ஜெட்டில் உற்பத்திக்கான இயக்கம் அறிவிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இளையோர் மேம்பாட்டில் கவனம் செலுத்திவரும் மத்திய அரசு, தனியார் துறைகளில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் உறுதியுடன் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இளையோர் சக்தியிலும், ஜனநாயக நடைமுறையிலும் இந்தியா வலுவான நாடாக திகழ்கிறது என்று அவர் தெரிவித்தார்.

மக்கள் தொகையிலும், ஜனநாயக நடைமுறையிலும் இந்தியா வலுவான நாடாக இருப்பதை உலக நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளதாக பிரதமர் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் நாடு முழுவதும் 90 கோடிக்கும் அதிகமான மக்கள் அரசின் நலத்திட்டங்கள் மூலம் பயனடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

வருவாய் மற்றும் நுகர்வு சமநிலையை பராமரிப்பதில் இந்தியா உலகின் முன்னணி நாடாக திகழ்கிறது என்று உலக வங்கி பாராட்டியுள்ளதை திரு நரேந்திர மோடி சுட்டிக்காட்டினார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பங்கேற்று, பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இதனிடையே, பணி நியமன ஆணையை வழங்கியதற்காக பிரதமருக்கும், மத்திய அரசுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாக சென்னையை சேர்ந்த திவ்யஸ்ரீ மற்றும் ரஞ்சனி கூறினர்.

(*Voice Byte - மாணவிகள் - 43 Sec)*

<<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டுவதில் தென்மாநிலங்களின் முன்னேற்றம் அவசியம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் அக்கட்சியின் உறுப்பினர்கள் இடையே கலந்துகொண்டு பேசிய அவர், ஊழல் அற்ற நிர்வாகம், அனைவருக்குமான அரசின் திட்டங்கள், அரசியலுக்கு அப்பாற்பட்ட வளர்ச்சி நடவடிக்கைகள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்றும், தீவிரவாதத்திற்கு எதிராக உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்

முன்னதாக, திருவனந்தபுரத்தில் அக்கட்சியின் புதிய மாநில அலுவலக கட்டிடத்தை திரு அமித் ஷா திறந்துவைத்தார்.

பின்னர் கன்னூரில் உள்ள ‘Taliparamba -வின் பிரதிசித்தி பெற்ற ராஜா ராஜேஷ்வரா கோவிலில் வழிபாடு செய்தார்

<<<<<<<>>>>>>

மத்திய அரசின் வேலைவாய்ப்பு முகாம் மூலம், ரயில்வேத்துறையில் 40 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பணியமர்த்தப்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பணிநியமன ஆணைகளை வழங்கி பேசினார்.

பணி நியமனம் பெற்றுள்ள அனைவரும் கர்மயோகி இணையதளம் வாயிலாக வழங்கப்படும் பயிற்சிகளில் கலந்துகொண்டு தங்களது திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த இணையதளத்தில் எட்டு லட்சத்திற்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் மத்தியஅரசு பணியாளர்களின் திறன் மேம்பட்டு வருவதாக அவர கூறினார்.

<<<<<<<>>>>>>

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் 26 நாடுகள் ஒன்றிணைந்து கூட்டுப்பணிக்குழு மூலம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்தியா முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள ஆண்டு அறிக்கையில், அதிகரித்துவரும் தீவிரவாத அச்சுறுத்தல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் பல்வேறு நாடுகளுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீம் ஸ்டெக், ஜி-20, ஏசியான், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு, பிரிக்ஸ், ஐரோப்பிய ஒன்றியம், குவாட் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளில் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு வருவதை அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில், கோயில் நிதி அறம் சார்ந்த பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

*(‘Voice Byte - ’ எல். முருகன் - 40 ‘Sec.)*

<<<<<<<>>>>>>

நாட்டின் சட்ட அமைப்புகள் தனித்துவ சவால்களை எதிர்கொண்டு வருவதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு B R கவாய் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் நல்சார் சட்ட பல்கலைக்கழகத்தின் 22-ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நீண்டகாலம் நடைபெறும் வழக்கு விசாரணை காரணமாக நீதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதாக குறிப்பிட்டார்.

சட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் நேர்மையான முறையில் செயலாற்ற வேண்டும் என்று திரு B R கவாய் அறிவுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

சத்தீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில், ஒன்பது பெண்கள் உட்பட 23 நக்சலைட்டுகள் காவல்துறையினரிடம் இன்று சரணடைந்தனர்.

இதுதொடர்பாக, செய்தியாளர்களிடம் பேசிய அம்மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு கிரண் சவான், சரணடைந்த நக்சலைட்டுகளின் மறுவாழ்விற்காக ஒரு கோடியே 18 லட்சம் ரூபாய் நிதியுதவி அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மாநில அரசின் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ், ஊக்கத்தொகையாக 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

<<<<<<<>>>>>>

புதுச்சேரியில் பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர் திரு ஜான்குமார் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல், திரு வி செல்வம், திரு இ தீப்பாய்ந்தான், திரு ஜி என் எஸ் ராஜசேகரன் ஆகியோர் புதுச்சேரி சட்டப்பேரவையின் நியமன உறுப்பினர்களாக மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<<<>>>>>>

சீனாவின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில், பத்து நாள் ராணுவ பயிற்சியை தைவான் தொடங்கியுள்ளது.

இந்த பயிற்சியில் அமெரிக்கா வழங்கியுள்ள அதிசக்தி வாய்ந்த ராக்கெட் அமைப்புகள் இடம்பெறும் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஐந்தாண்டுகளாக தைவான் எல்லைப்பகுதியில் சீன ராணுவத்தின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதையடுத்து தைவான் இந்த பயிற்சியை மேற்கொண்டுள்ளது.

<<<<<<<>>>>>>

புழுதிப்புயல் காரணமாக 150-க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த 33 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, இந்த மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆண்டுதோறும் 200 கோடி டன் புழுதி வெளியேறுவதன் காரணமாக, சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு கடும் பாதிப்பு ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பாலைவனங்களில் இருந்து வீசும் இந்த புழுதிப்புயல் காரணமாக பல்வேறு நாடுகள் பாதிப்புக்கு உள்ளாவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் 'Prarthana Thombare '- நெதர்லாந்தின் Arianne Hartono இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 5-7, 6-3, 10-7 என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் Petra Hule –ருமேனியாவின் Gabriela Lee இணையை வென்றது.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Niki Kaliyanda Poonacha - ஜீவன் நெடுஞ்செழியன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-----------

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

மேட்ரிட்டில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் குழு பிரிவில் ஜோதி சுரேகா, 'Parneet Kaur, Prithika Pradeep, ஆகியோர் வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினர்.

கலப்பு குழு பிரிவில் ரிஷப் யாதவ், ஜோதி சுரேகா ஆகியோர் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

-------------

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை 5 விக்கெட் இழப்பிற்கு 291 ரன் எடுத்துள்ளது.

Lords-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 387 ரன் எடுத்துள்ளது.

--------------

இந்தியா - இங்கிலாந்து இடையேயான 5-வது மற்றும் இறுதி மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

பர்மிங்காமில் இப்போட்டி இரவு மணி 11.05-க்கு தொடங்குகிறது.

------------------

Beckenham-ல் நடைபெற்றுவரும் இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை 4 விக்கெட் இழப்பிற்கு 211 ரன் எடுத்துள்ளது.

<<<<<<<END>>>>>>